உ
சிவமயம்



யாழ்ப்பாணம் தென்மராட்சி வரணிக் கோவிற்பற்று
தாவளை இயற்றாலை வாசரும்
சைவ வேளாண் குலதிலகருமாகிய
அமரர்

# இராசையா - சிதம்பரநாதர் (வீரசிங்கம்)

அவர்களின் சிவப்பேறு குறித்த

# நினைவு மலர்

13.11.2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய்
திகழ்ந்து , அன்போடும் பண்போடும்
எம்மைப் பேணிப்பாதுகாத்து , எம்மை
நல்வழி நடாத்தி இன்று வானுறையும்
தெய்வமாகிவிட்ட பொன்னடிகளில்
காணிக்கையாக இம்மலரினை
சமர்ப்பிக்கின்றோம்.



குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

அமரர்

# இராசையா சிதம்பரநாதர்

## (வீரசிங்கம்)

மலர்வு 1929 - 7 - 2



உதிர்வு 2005 - 10 - 15

### திதி நிர்ணய வெண்பா

தக்க பார்த்திப சார் புரட்டாதி திங்கள்
மிக்க வொளிர் பூர்வபக்க திரயோதசி - திதியே
கொற்கை நற் சிதம்பரநாதர் என்பார் குவலயம்
விட்டே ஈசனடி சேர்ந்தார் என்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# தோத்திரப் பாக்கள்

## தேவாரம்

தந்தையார் தாயார் உடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தாமாரே
வந்தவர் றெங்ஙனே போமா றேதோ
மாயமாம் இற்கேதும் மகிழ வேண்டாம்
சீந்தையீர் உமக்கென்று சொல்லக் கேண்மின்
திகழ் மதியும் வாளரவும் திளைத்த சென்னி
என்றெழுவார் திருவிசும்பில் இருக்கலாமே.

## திருவாசகம்

வினைப்பிறவி என்கின்ற வேதனையிலகப்பட்டுத்
தனைச்சிறிதும் அறியாதே தளர் வெய்திக் கிட்டப்பேணை
என்னைப் பெரிதும் ஆட்கொண்டேன் பிறப்பறுத்த
இணையிலிமை
அனைத்து வகுந் தொழுதில்லை அம்பலத்தைக் கண்டேனே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உவப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
ஒளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்து கந்தாயைத்
தொண்டனே விளம்புமா விளம்பே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலா கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனை
திருவீழி மிழலை விற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழறவுழறி
உமை மணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறிவும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினி லோங்கிய ஞானம்
உவமையிலாக் கலையஞானம் உணர்வரிய மெஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்

## திருப்புகழ்

மதியால் வித்தகனாகி மனத்தாலு த்தமனாகி
பதிவாகிச் சிவஞான பரலோகத்தருள்வாயே
நிதியெ சித்தியமே என்நினைவே நற்பொருளாயோர்
கதியே சொற்பரவேளை கருவூரிற் பெருமானே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபடு கடவுளர் துதி

## கல்வளை விநாயகர்

நலம் விளக்கு பல்வளங்கள் நிறைந்தொளிரு யற்றாலை
நலம் விளக்கு கல்வளை விநாயகனே தந்தை தருமாங்கனியை
வலம் வந்து கொடுத்தவனே வாழ்நாள் நின் பணிசெய்த
குலவிளக்கு சிதம்பரநாதனுக்கு நற்கதி அருள்வாயே.

## சுட்டிபுர அம்மன்

சோலையிலே வீற்றிருக்கும் சுந்தரியே நாயகியே
தொல்லைகள் அகற்றிடுவாய் கண்ணகியே மாரியம்மா
வல்லவினை அகற்றிடுவாய் வேப்பிலையின் நாயகியே
பொல்லாத வினையெல்லாம் பூண்டோடு அழித்திடுவாய்
தாயே மாரியம்மா

## சந்நிதி முருகன்

கோலமயில் வாகனனே கும்பிட்ட நல்லடியார்
ஞாலமதில் நற்போறு தான் வழங்க - காலமெல்லாம்
சந்நிதியை ஏற்றவனே தாழ் பணிந்து கும்பிட்டேன்
உன்னருளை எந்தனுக்கு ஊட்டு

## வல்லிபுர ஆழ்வார்

வங்கக் கடலோரம் வந்துதித்த சங்கரனே
வந்தவர்க்கு நலமளிக்கும் வல்ல நல்ல அழ்வாரே
எங்களது தந்தை எமைப் பிரிந்து வருகிறார்
எக்குறையும் வைக்காது ஏற்பாயோ வல்லவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

ஏர்பூத்த வயல் வெளிகள் மங்காத சைவ நெறி
சேர் பூத்த தென்னை மனை தெவிட்டாத மா, பலாவும்
எங்கணும் மிளிர் தொளிர் தாவளை இயற்றாலை நற்றவப்
பதியின் நாயகமாக உற்ற இராசையா உயர் குணத்தந்தையும்
அன்போடு பக்தி அடக்கம் வாய்மை தென்பெல்லாம் ஊட்டிய
சின்னம்மா அன்னை சிந்தை கலந்து செய்தவப் பேற்றால்
வந்துதித்த நன் மக்களான பொன்னுத்துரையொடு
செல்லத்துரையும் பொறுப்புள்ள மகனாய் முருகேசுவும்
எண்ணித்துணியும் இனிய இராமலிங்கமும் என்பவர் தம்மொடு
இன்று நாம் நினைவு மலர்களைச் சூட்டும் சிதம்பரநாதர்
ஆயிரத்தித் தொழாயிரத்து 29ல் ஆடி மாதம் 2ம் நாளில்
உத்தமராக உதித்தார் இவ்வூரில் அன்னைமடியை அப்பர் தம்
தோள்தனை துன்று பொற் பாயலாய் தூங்கி வளர்ந்து பாலப்
பருவம் பத்தும் கடந்து ஐந்தாம் வயதில் தகு கலை கற்று
ஓங்கும் அறிவொடு உயிரினும் சிறந்த ஒழுக்க நலனும்
இழக்குகளகற்றி விழுப்ப மெய்தும் வீறுடன் விளக்கி
கண்ணைக் கவரும் கண்ணியராகி கமலத்தமர்ந்த திருமகள்
என்ன இல்லத் தழகு எழில் மணம் கூடும் நல்ல நாளும் நாடி
வரவே மாதவச் சுப்பிர மணியத்தையும் ஆதரவான தங்கம்மா
அன்னையும் பூதவம் புரிந்த புண்ணியப் பேற்றால் அறிவுநிறை
யோர்ப்பு அடக்கம் முயற்சி செய்தொழில் வல்லமை யாவும்
நிறைந்த செல்லம்மாவை அந்தணர் அக்கினி அருந்ததி சாட்சி
பொன்னார் தாலி வாளுடன் பூண்டு இல்லற வாழ்வில்
நல்லறம் புரிந்து இனிதே வாழ்ந்தனர் நடுவூர் தன்னில் அருள்புரி
கோயில்கள் அஞ்சலிப் பலனும் விரதங்கள் ஆற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மையின் பலனும் சுந்தரரூபி ராணி மலரும் சிவபத மடைந்த இராசநாயகமும் மாதவச் சீலர் இராசரத்தினமும் மனையாளாக தனலட்சுமியும் பேரதே விஜிதாவொடு பிரிய நல் பிரவீனாவும் நேரதே துஸ்யந்தன் தெளிந்த மதியூகி பிரசாந்தும் வாய்த்தனர் இவர்க்கு.

பண்புடைய மகளாய் இரஞ்சிதமலரும் சிவனருள் துணைவனாக சிற்சபானந்தனும் அவர் தம் பிள்ளைகள் கஜேந்திரனும் அருந்தவப் புதல்வி அருண்யாவும் அமைந்தனர் இவற்கு இதமுறு மகளாய் இந்திராணியும் இவர்தம் கணவராய் செல்வரத்தினமும் வம்சவிளக்காய் கனடா வாழ் வசீகரனும் நிதர்சனுமிங்கே வாரீசாகினர். இளைய புதல்வியாக இரவீந்திரராணியும் மணாளனாக தவராசாவும் இணைந்து பேறாகினர் இப்புவியில் இவர்க்கு புவமை புகளும் கனிஸ்ர புத்திரன் இரவீந்திரனின் இனிய பத்தினியாக லலிதாவும் பந்தப் பேறின் பாசப் புதல்வர் தினுஷன், திபிஷன் இருவருமிவர்கள் சீதனச் சீமை கொலண்ட் நாட்டில் சீருடன் வாழ்ந்து வருகின்றனரே தணிமுகப் இன்சொல் தழுவிய சண்முகப் பொன்னின் அழகு பூத்திடும் பொன்னம்பலம் தோற்றும் வினைத்திறன் தங்கராசா சாற்றும் தருகலை ஆசான் கதிரேசு செம்மனச் செம்மல் கனகம்மா என்னும் சிறந்த மைத்துனர் மதுனியர் தம்முடன் மனமாய் ஒத்தே உழைத்த உயர் குணசீலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவாலேங்கும் நெஞ்சங்களின் சோகம்.....

## மனைவி புலம்பல்

பொற்றாலி பூண்டெனக்கு நெற்றியில் பொட்டும் வைத்து
பெற்ற என் சரிகைப் பட்டு சலசலக்க
அற்புதமாய் ஆனந்தம் பெருகியே பதிசிறக்க
பெற்றோமே நல்வாழ்வின் பொக்கிஷமாய் சேய்களிங்கே
சற்றேனும் தளர்வின்றி விவசாயம் உன் தொழிலாய்
சொத்தாக எம்முறவில் சாதனைகள் புரிந்தாயே
முற்ற மதில் சுற்றியுமை எனைப்பிடித்து கதறியழ
மண்மீது என்பாதம் கண்ணீரில் நனைந்ததுவோ

## பிள்ளைகள் புலம்பல்

தந்தையாய் நின்றெமைத் தாங்கிநின்ற தண்ணமுதே
சேய்களிங்கே கலங்குதலை பாராயோ - ஓயாதே
உன்னினைவாலு ருகுகிறோம் உயர்பேறே யெங்குற்றாய்
அன் பெண்ணி அலறுகிறோம் நாம்.

நோயிற் துவளாமல் நொந்து மனம் வாடாமல்
பாயில் பலநாட்கள் படுக்காமல் போயினையோ
புண்ணியத்தின் புகளுருவே புன்சிரிப்பை ஏனிழந்தாய்
தந்தையே நினை காண்பதென்னாள்

## மருமக்கள் புலம்பல்

முற்றமதில் நிறைகுடமும் முழு நிலவும் ஒளியினிலும்
மங்கலநாள் பார்த்து மனையேற்ற மாமாவே
சுற்றமது சேர்ந்திருக்க செகத்திலெமை மக்களுமாய்
சுத்தமுடன் வாய் சொரியும் எம்மகத்தின் பெருநிலவே
கற்றோரும் மற்றோரும் கண்ணீரால் அஞ்சலிக்க
கூடிநாம் பிடியளவு வாய்க்கரிசி இட்டோமே
இற்றரையில் இங்கிதமாய் எம்மையே வாழவைத்த
ஆற்றல் மிகுமாமாவே இதயமதில் சுமப்போமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சகோதரர் புலம்பல்
வற்றாத பாசம் வடியும் முகத்துடன் வந்துவந்து
சற்றேனும் ஆறாக் கதைகளும் பேசிச் சிரிக்கவைத்தாய்
நெற்றாகி வாடிநிதம் சோக வாழ்வை நமக்களித்தோ
அற்றாயென் றால் நம் அடைசோகம் மாறவில்லை.

### பேரர் புலம்பல்
கண்டதும் கைகளாத் தூக்கி இறுக அணைத்தன்புடன்
உண்டிட நல்ல சுவைப்பண்டம் தந்த உயர்ந்த அன்பு
கொண்ட நம் தாத்தா குழறவைத் தோடி மறைந்தனையோ
கண்டுகதைத்திட மாட்டீரோ நெஞ்சு கலங்கியதே

### வெளியூர் பேரர் புலம்பல்
இறந்திட்ட சேதிகேட்டு இருகண்கள் நீரைச்சிந்திட
பறந்திங்கு வந்து பார்க்க முடியவில்லை என்று பதறினோமே
சிறந்த நற் தாத்தா கொண்ட துயரிது மாறுமாமோ
உறங்கவும் முடிய வில்லை ஓலமிட்டழுகின்றோமே.

### பெறா மக்கள் புலம்பல்
பெற்றெடுத்த தந்தை தரும் பாசம்தன்னை
பிறரிடத்தில் பெறலாமோ? பெற்றோமே நாம்
குற்றமவை மறந்தன்பு காட்டி நின்ற
குணமுங்களிடம் கண்டு குதூகலித்தோம்
பற்றி யெரி வயிற்றுடனே பாவியோர் நாம்
புலம்பியழ கண்மூடிப் போன தேனோ
சுற்றி நின்றே அழுகின்றோம் தேம்புகின்றோம்
துயராற வழியறியோம் துடிக்கின்றோமே

### மைத்துன மைத்துனியர் புலம்பல்
வீட்டிற்கு வந்தால் வரவேற்று சேதி வினவுவதும்
நாட்டு நடப்புகள் சொல்லி நிலமை விளக்குவதும்
கேட்டு மகிழ்ந்தவர் நாமுந்தன் சோகமுடிவால்
வாட்டும் துயரம் அடங்காமல் தேம்பி அழுதோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அயலவர் புலம்பல்

*பத்தும் படைத்தவர் பாரோர் புகழ் பரிமளிப்பாய்*
*நித்தம் உலாவினீர் நெஞ்சம் இனிக்க இருந்துவிட்டு*
*செத்த உம் சேதி கேட்டு திகைத்தெழுந்தோம்*
*அத்தன் அடியில் அத்தனை இன்பமோ ஆறுவதோ.*

## பட்டினத்தார் பாடல்கள்

1. பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டோடி யாடி முடிந்த பின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தருகே யினிச் சாபிணங்கள்
கத்தும் கணக்கென்ன காண் கயிலாபுரிக் காளத்தியே.

2. என்னைப் பெற்ற தாயாரு மென்னை பிணமென்றிகழ்ந்து விட்டார்
பொன்பெற்ற மாதரும் போவென்று சொல்லிப் புலம்பிவிட்டார்
கொன் பெற்றமைந்தரும் பின்வலம் வந்து குடமுடைத்தார்
உன் பற்றொழிய வொரு பற்று மில்லை யுடையவனே

3. அன்னை யெத்தனை யெத்தனை அன்னையோ
அப்ப னெத்தனை எத்தனை யப்பனோ
பின்னை யெத்தனை யெத்தனை பெண்டீரோ
பிள்ளை யெத்தனை எத்தனை பிள்ளையோ
முன்னை யெத்தனை எத்தனை சென்மமொ
மூடனாயடி யேனு மறிந்திலேன்
இன்ன மெத்தனை எத்தனை சென்மமோ
என் செய்வேன் கச்சி யேகம்பநாதனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானப்பாடல்கள்

இப்பவோ பின்னையோ மத்தியானத்திலோ
இரவு படு நேரமதிலோ
இரவிலோ பகலிலோ உதயகாலத்திலோ
எந்தெந்த நேரமதிலோ
அப்பிலோ தீயிலோ நாயிலோ பேயிலோ
அரவு பெரும் இடிதனிலோ
ஆறாத புண்ணிலோ நடை நோதன்னிலோ
ஆயுதங்களாலேயோ
செப்பரி வீட்டிலோ காட்டிலோ மேட்டிலோ
தெருவிலோ திண்ணை தன்னிலோ
செகுந்தனிலோ எங்கெங்கேயொ பாவியான நான்
இவன் விடுகின்ற நேரம்
அப்பொழுது வந்து நின் கருணை தந்தெனையாளும்
அம்பலத்தமர்ந்த வாழ்வே
அண்டபகிரண்டமும் அங்கவுயிர் தண்டனிடும்
ஆதியே சோதியே மயமே.

முடிசாய்ந்த மன்னருமற்று மளோரும் முடிவிலாரும்
பிடி சாம்பராய் வெந்து மண்ணால் வசம்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லாத் பொன்னினம் பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றே யறிவாரில்லையே

## தேற்றம்

*விடிவுதரும் சூரியனும் வையகத்தில் ஒளிதந்து*
*மேற்றிசையில் மறைவது விதியாகும்*
*மடியதனில் சுரந்துமே சொரிகின்ற பாலென்றும்*
*மாட்டிடையே சென்று மீளவும் சேர்வதுண்டோ*
*துடிக்கின்ற இதயமது துடிக்கும் வரை வாழ்விருக்கு*
*துடிப்பதனை நிறுத்திவிட்டால் தேம்புவதில் பயனில்லை*
*கொடியதனில் உதிர்ந்திட்ட குடும்பத்தின் குலமகளை*
*கோடி கணம் பிரார்த்தித்து கூடி வர காண்போமே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நாள்கள் அல்லது தினங்கள்

| | | |
|---|---|---|
| மார்ச் 08 | – | சர்வதேச மகளிர் தினம் |
| மார்ச் 22 | – | சர்வதேச முடிநீர் தினம் |
| மார்ச் 27 | – | சர்வதேச நாடக தினம் |
| ஏப்ரல் 07 | – | சர்வதேச சுகாதார தினம் |
| ஏப்ரல் 10 | – | சர்வதேச அன்னையர் தினம் |
| ஏப்ரல் 12 | – | சர்வதேச தாதிகள் தினம் |
| ஏப்ரல் 22 | – | சர்வதேச பூமிப் பாதுகாப்பு தினம் |
| ஏப்ரல் 23 | – | சர்வதேச புத்தக தினம் |
| மே 01 | – | சர்வதேச தொழிலாளர் தினம் |
| மே 03 | – | சர்வதேச பத்திரிகை நாள் |
| மே 08 | – | சர்வதேச நூதனசாலை தினம் |
| மே 14 | – | சர்வதேச அன்னையர் தினம் |
| மே 15 | – | சர்வதேச குடும்பநலன் தினம் |
| மே 17 | – | சர்வதேச தொலைத் தொடர்பு தினம் |
| மே 21 | – | சர்வதேச கலாச்சார / பண்பாட்டு தினம் |
| மே 31 | – | சர்வதேச புகையிலை மறுப்புத் தினம் |
| யூன் 05 | – | சர்வதேச சுற்றுச் சூழல் தினம் |
| யூன் 26 | – | சர்வதேச போதை மருந்து எதிர்ப்பு தினம் |
| யூலை 11 | – | சர்வதேச சனத்தொகைத் தினம் |
| யூலை 26 | – | சர்வதேச சித்திரவதை எதிர்ப்புத் தினம் |
| யூலை 28 | – | சர்வதேச அகதிகள் தினம் |
| செபரெம்பர் 08 | – | சர்வதேச எழுத்தறிவு அல்லது படிப்பறிவு தினம் |
| ஒக்ரோபர் 01 | – | சர்வதேச சிறுவர் தினம் |
| ஒக்ரோபர் 03 | – | சர்வதேச மது ஒழிப்புத்தினம், உலக உயிரினங்கள்தினம் |
| ஒக்ரோபர் 06 | – | சர்வதேச ஆசிரியர் தினம் |
| ஒக்ரோபர் 09 | – | சர்வதேச அஞ்சல் தினம் |
| ஒக்ரோபர் 10 | – | சர்வதேச உளச் சுகாதார நாள் |
| ஒக்ரோபர் 15 | – | சர்வதேச வெள்ளைப் பிரம்பு நாள் விழிப்புலன் அற்றோர் நாள் |
| ஒக்ரோபர் 16 | – | சர்வதேச உணவு நாள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஒக்ரோபர் 17 | – | சர்வதேச வறுமை ஒழிப்பு நாள் |
| ஒக்ரோபர் 21 | – | சர்வதேச விவசாய நாள் |
| ஒக்ரோபர் 30 | – | சர்வதேச சேமிப்பு நாள் |
| நவெம்பர் 20 | – | சர்வதேச சிறுவர் உரிமைகள் தினம் |
| நவெம்பர் 21 | – | சர்வதேச கடற்தொழில் தினம் |
| டிசெம்பர் 01 | – | சர்வதேச எயிட்ஸ் நாள் |
| டிசெம்பர் 02 | – | சர்வதேச ஊனமுற்றோர் நலன் நாள் |
| டிசெம்பர் 10 | – | சர்வதேச மனித உரிமைகள் தினம் |
| டிசெம்பர் 13 | – | சர்வதேச சிறுவர் ஒலிபரப்பு நாள் |

## நூல்களும் அதன் ஆசிரியர்களும்

| | | |
|---|---|---|
| சிலப்பதிகாரம் | – | இளற்கோ அடிகள் |
| இராமாயணம் (மூலம்) | – | ~~பொன்மீசி~~ வான்மீகி |
| இராமாயணம் (தமிழில்) | – | கம்பர் |
| பெரியபுராணம் | – | சேக்கிழார் |
| சீறாப்புராணம் | – | உமறுப்புலவர் |
| மகாபாரதம் (மூலம்) | – | வியாசர் |
| மகாபாரதம் (தமிழில்) | – | வல்லிபுத்தூரர் |
| திருவாசகம் | – | மாணிக்கவாசகர் |
| தேம்பாவணி, ஒப்பிலக்கணம் | – | விரமாமுனிவர் |
| மகாவம்சம் | – | மகாநாம |
| பாஞ்சாலி சபதம் | – | சுப்பிரமணியபாரதியார் |
| காஞ்சிப்புராணம் | – | சிவஞானமுனிவர் |
| நற்சிந்தனை | – | யோகர் சுவாமிகள் |
| நன்னூல் | – | பவணந்தி முனிவர் |
| நளவெண்பா | – | புகழேந்தி |
| வெற்றி வேற்கை | – | அதிவீரராமபாண்டியன் |
| நல்வழி, நீதிநூல்கள், ஆத்திசூடி கொன்றை வேந்தன் | – | ஔவையார் |
| மனோன்மணியம் | – | சுந்தரம்பிள்ளை |
| கீதாஞ்சலி | – | இரவீந்திரநாதத் தாகூர் |
| மணிமேகலை | – | சீத்தலைச் சாத்தனார் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தொல்காப்பியம் | – | தொல்காப்பியர் |
| சூளாமணி | – | தோலாமொழித் தேவர் |
| திருப்புகழ் | – | அருணகிரிநாதர் |
| போரும் சமாதானமும் | – | லியோ ரோல்ஸ் றோய் |
| இலியட், ஒடிசி | – | ஹோமர் |
| நள்ளிரவுச் சுதந்திரம் | – | லாரி காலின்ஸ், டொமினிக் லேப்பியர் |
| அர்த்த சாஸ்திரம் | – | கௌடில்யர் |
| ஆசியஜோதி | – | எட்வின் ஆர் நொல்ட் |
| என் சத்திய சோதனை | – | மகாத்மா காந்தி |
| குடியாட்சி | – | பிளாற்றோ |
| ஒரு உலகம் | – | வேன்ட்ஸ் லிக்கி |
| மூலதனம் | – | கார்ல் மாக்ஸ் |
| சகுந்தலை வெண்பா | – | க. நடேசபிள்ளை |
| இனியவை நாற்பது | – | பூதஞ் சேந்தனார் |
| கீத கோவிந்தம் | – | ஜெயதேவர் |

## சிறப்புப் பெயர்களும் நாடுகளும்

| | | |
|---|---|---|
| தெற்கேயுள்ள பிரித்தானியா | – | நியூசிலாந்து |
| நள்ளிரவுச் சூரிய உதய நாடு | – | நோர்வே |
| சூரியன் உதிக்கும் நாடு | – | ஜப்பான் |
| நைல் நதியின் கொடை | – | எகிப்து |
| ஆயிரம் வாவிகள் நாடு | – | பின்லாந்து |
| உலகத்தின் கூரை | – | திபெத் |
| ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் | – | சுவிஸ்சலாந்து |
| ஐரோப்பாவின் காப்பகம் | – | பெல்ஜியம் |
| ஐரோப்பாவின் நோயாளி | – | துருக்கி |
| புனிதநாடு | – | பலஸ்தீனம் |
| உலகின் சர்க்கரைக்கிண்ணம் | – | கியூபா |
| தங்கப் போர்வை நாடு | – | அவுஸ்திரேலியா |
| மரகதத் தீவு | – | அயர்லாந்து |
| ஆயிரம் ஏரிகள் நாடு | – | பின்லாந்து |
| பொற்கோபுர நாடு | – | மியன்மார் (பர்மா) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சூரியன் மறையும் நாடு | – | இங்கிலாந்து |
| இருண்ட கண்டம் | – | ஆபிரிக்கா |
| மத்தியதரைக்கடலின் திறவுகோல் | – | ஜிப்ரோல்ரா் |
| வில்லிப்பூக்களின் நாடு | – | கனடா |
| அதிகாலை அமைதி நாடு | – | கொரியா |
| ஏழு குன்று நகரம் | – | ரோம் |
| பவளத்தீவு | – | பஹ்ரெயின் |
| கங்காருகளின் நாடு | – | அவுஸ்திரேலியா |

## *காலநிலையும் விழாக்களும்*

| | | |
|---|---|---|
| ஒரு வருடம் | – | காகித விழா |
| இரு வருடம் | – | பருத்தி விழா |
| மூன்று வருடம் | – | தோல் விழா |
| நான்கு வருடம் | – | பூ விழா, பழ விழா |
| ஐந்து வருடம் | – | மர விழா |
| ஆறு வருடம் | – | கற்கண்டு விழா, இரும்பு விழா |
| ஏழு வருடம் | – | கம்பளி விழா, செம்பு விழா |
| எட்டு வருடம் | – | வெண்கல விழா |
| ஒன்பது வருடம் | – | மண்கலச விழா |
| பத்து வருடம் | – | தசர விழா, அலுமினிய விழா |
| பதினொரு வருடம் | – | எஃகு விழா |
| பன்னிரண்டு வருடம் | – | லின்ன விழா (Linen) |
| பதின்மூன்று வருடம் | – | பின்னல் விழா (Lace) |
| பதினான்கு வருடம் | – | தந்த விழா |
| பதினைந்து வருடம் | – | ஸ்படிக விழா |
| இருபத்தைந்து வருடம் | – | வெள்ளி விழா |
| ஐம்பது வருடம் | – | பொன் விழா |
| அறுபது வருடம் | – | மணி விழா, வைர விழா |
| எழுபத்தைந்து வருடம் | – | பவள விழா |
| நூறு வருடம் | – | நூற்றாண்டு விழா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச குறியீடுகள்

| | | |
|---|---|---|
| ஒலிவ் மரத்தின் இலை | - | சமாதானம் |
| வெண்புறா | - | சமாதானம் |
| சக்கரம் | - | வளர்ச்சியைக் குறிக்கும் |
| தாமரை | - | பண்பாடு, நாகரீகம் |
| கறுப்புத் துணி அணிதல் | - | துக்கம் |
| கறுப்புக் கொடி | - | எதிர்ப்பு |
| எலும்பு நடுவில் மண்டையோடு | - | ஆபத்து |
| சிவப்பு விளக்கு | - | மருத்துவமனை, ஆபத்து |
| செஞ்சிலுவை | - | செஞ்சிலுவைச் சங்கம், மருத்துவமனை |
| செம்பிளை | - | அரபு நாடுகள், செஞ்சிலுவைச் சங்கம் |
| கையில் தராசு ஏந்தி கண் கட்டப்பட்டுள்ள பெண் | - | நீதி |
| சிவப்புக் கொடி | - | புரட்சி |
| அரை கம்பத்தில் கொடி | - | இரங்கல் |
| தலைகீழாக | - | துன்பம் |
| மஞ்சள் கொடி | - | தொற்றுநோய் |
| சிவப்பு முக்கோணம் | - | குடும்பக் கட்டுப்பாடு |
| பச்சை விளக்கு | - | அமைதி |
| தீப்பந்தம் | - | ஒலிம்பிக் |
| உடைந்த கைவிலங்குடன் இருகைகள் | - | விடுதலை |
| மேல்நோக்கி செங்குத்தான லாம்பு | - | வெற்றி, ஆரம்பம் |

## வினோத உயிரினங்கள்

| | | |
|---|---|---|
| அதிக நீர் அருந்தும் பறவை | - | புறா |
| மிகச் சிறிய முட்டையிடும் பறவை | - | தேன்சிட்டு |
| சத்தமிடாத விலங்கு | - | ஒட்டகச்சிவிங்கி |
| ஞாபகசக்தி கூடிய விலங்கு | - | யானை |
| நீலநிற இரத்தத்தையுடைய கடல் உயிரினங்கள் | - | நண்டு, இறால் |
| பல்லில்லாத முலையூட்டி | - | தேவாங்கு |
| கடல் நீரைப் பருகும் ஒரேயொரு பறவையினம் | - | பென்குயின் |
| பறக்கும்போதே தூங்கும் பறவை | - | அல்பட்றாஸ் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| மிகப்பெரிய வாயுள்ள விலங்கு | – | நீர்யானை |
| பித்தப்பை இல்லாத முலையூட்டி | – | எலி |
| நாக்கு இல்லாத ஊர்வன | – | முதலை |
| கண்களின் மூலம் வியர்வை வெளியேற்றும் உயிரினம் | – | முதலை |
| நான் உண்ட எலம்பை ஜீரணிக்கும் ஆற்றலுடைய ஒரேயொரு உயிரினம் | – | முதலை |
| பறக்கும் முலையூட்டி | – | வெளவால் |
| நீந்தத் தெரியாத விலங்கு | – | ஒட்டகம் |
| மண்டையோடும், அலகும் ஒரே எலும்பால் அமையப் பெற்ற பறவை | – | மரங்கொத்தி |

## *உலகநாடுகளின் தேசிய சின்னங்கள்*

| | | |
|---|---|---|
| அமெரிக்கா | – | தங்கத்தடி |
| அவுஸ்திரேலியா | – | கங்காரு |
| அயர்லாந்து | – | ஹப்ரக் மலர் |
| இந்தியா | – | சிங்கத்தின் தலை |
| இலங்கை | – | வாளுடன் சிங்கம் |
| ஈரான் | – | ரோஜா மலர் |
| ஈராக் | – | சிவப்பு ரோஜா |
| எகிப்து | – | தாமரைப் பூ |
| கனடா | – | அல்லி (வெள்ளை மலர்) |
| சீனா | – | திராட்சை மலர் |
| சுவிற்சர்லாந்து | – | இட்லிஸ் மலர் |
| பாகிஸ்தான் | – | பிறை |
| பெல்ஜியம் | – | அசலியா மலர் |
| போலந்து | – | சோலி மலர் |
| பிரான்ஸ் | – | அல்லி மலர் |
| பிரித்தானியா | – | ரோஜா மலர் |
| யப்பான் | – | கூட்டுப் புழுக்கூடு |
| றுமேஸ்யா | – | பூவரசம் பூ |
| ஜேர்மனி | – | கான்பூ |
| ஸ்பெயின் | – | கருடன் |
| டென்மார்க் | – | கடற்கரைச் செடி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கல்

எங்கள் வாழ்விற்கு ஒளியும் வளமும் தந்து, எம்மை இனிதே இவ்வுலகில் வாழ வைத்த அன்புத் தெய்வம் இறை பதம் நாடிய செய்தி கேட்டு ஓடோடி வந்து ஒப்பாரி சொல்லி அனுதாபம் செய்தோர்க்கும். உடனிருந்து உதவிகள் பல நல்கியோர்க்கும் ஆற்றொணாத் துயரில் கலந்து கொண்டு ஆறுதல் மொழி கூறி எமைத் தேற்றியோர்க்கும் வெளிநாட்டில் இருந்தும், உள்நாட்டிலிருந்தும் தொலை பேசி வாயிலாக அனுதாபம் தெரிவித்தோர்க்கும், உணவளித்து உதவியோருக்கும், இன்று நடைபெறும் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளிலும் மதிய போசன நினழ்வுகளிலும் கலந்து கொண்டு அமரரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்தோர்க்கும், கிரியைகள் நன்காற்றிய சிவாச்சாரியப் பெருமக்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**

மருதம் பதிப்பகம் ~ நெல்லியடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
ஏதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்
அது வேறொருவருடையதாகும்.



"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்."

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org